# குச்சவெளி பிரதேச செயலக பிரிவில் அங்காடி வியாபாரத்தில் ஈடுபடும் பெண்களின் பொருளாதார நிலை

[1]அ. டிலக்ஷிகா, [2]அ. ஜெயப்பிரதீபா

பொருளியல் கற்கைகள் அலகு, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
*dilakshika2@gmail.com[1], ajeyapiratheeba@yahoo.com[2]*

**ஆய்வுச்சுருக்கம் –** இலங்கையில் சமூகப் பொருளாதார அரசியல் செயற்பாடுகளில் பெண்களின் பங்களிப்பு அதிகரித்துள்ளதோடு கைத்தொழில் உற் பத்தி, சுயதொழில் உற்பத்தி, சந்தைப்படுத்தல் போன்றவற்றில் அவர்களின் பங்களிப்பு தற்போது அதிகளவாக காணப்படுகின்றது. அந்தவகையில் இவ்வாய்வானது குச்சவெளி பிரதேச செயலர் பிரிவில் அங்காடி வியாபாரத் தில் ஈடுபடும் பெண்களின் தற்போதய பொருளாதாரநிலையினை கண்டறிவதுடன் பொருளாதார காரணிகள் பெண்களின் பொருளாதார நிலையில் எவ்வாறான செல்வாக்கினை செலுத்துகின்றது என்பதனை ஆராய்வதாக அமைந்துள்ளது.

இவ்வாய்வானது முதல் நிலைத்தரவுகள் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகளை அடிப்படையாகக் கொண்டு ஆய் வு செய்யப்படுகின்றது. முதன்நிலைத் தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக இங்கு எளிய எழுமாற்று மாதிரிமுறையினைப் பின்பற்றி ஆய்வுப்பிரதேசத்திலிருந்து மாதிரிகள் தெரிவு செய் யப்பட் டு வினாக் கொத்து மற்றும் நேர்காணல் முறைகளில் தரவுகள் சேகரிக்கப்பட்டன. இரண்டாம் நிலைத்தரவுகள் மத்திய வங்கி ஆண்டறிக்கை, இணையம், குச்சவெளி பிரதேச செயலக அறிக்கைகள் என்பவற்றிலிருந்தும், சேகரிக்கப்பட்டன. இவ்வாறான தரவுகளை சேகரிக்கும் பொருட்டு பொருளாதாரகாரணிகளான வருமானம், சேமிப் பு, முதலீடு, சந்தைவாய்ப்பு, நிறுவன உதவி போன்ற மாறிகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. சேகரிக்கப்பட்ட தரவுகள் தனிமாறி மற்றும் இருமாறி பகுப் பாய்வு முறை (Liket scale ,Univariate and Bivariate analysis Techniques) மூலமாக பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளதுடன் SPSS கணனி மென் பொருளை பயன்படுத்தி கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன. அந்தவகையில் குச்சவெளிரதேசசெயலகபிரிவில் அங்காடி வியாபாரத்தில் ஈடுபடும் பெண்களின் பொருளாதாரநிலையில் பொருளாதாரகாரணிகள் உயர்ந்தளவில் செல்வாக்கினை செலுத் துகின்றன என் ற முடிவு பெறப்பட்டுள்ளது.

**முதன்மைச்சொற்கள் :** அங்காடி, வியாபாரம், பொருளாதார நிலை, பொருளாதாரக்காரணி

## I. அறிமுகம்

இன்று சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரின் கவனத்தினை ஈர்த்து வருகின்ற ஒன்றாக சந்தையியல் விளங்குகின்றது. சந்தையானது கொள்வனவாளரும்இ விற்பனையாளரும் பொருட்கள் அல்லது சேவைகளை பரிமாற்றம் செய்வதற்கு தொடர்பு கொள்ளும் ஏற்பாடுகளின் ஒரு அமைப்பாகும். அதாவது பொருட்களை வாங்குபவர்களும்இ விற்பவர்களும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்வதற்கான ஓர் இடத்தினையே குறிக்கின்றது. உற்பத்திக் கோட்பாட்டில் சந்தை அமைப்பும் அதனோடு இணைந்த சந்தைப்படுத்தல் செயன்முறையும் முக்கியமானதாக விளங்குகின்றது. சந்தை நடவடிக்கையில் அங்காடி வியாபாரமும் குறிப்பிடத்தக்க இடத்தினை பெறுகின்றது. இலங்கையில் சந்தைப்படுத்தல் செயன்முறையில் பெண்கள் அதிகளவில் ஈடுபட்டு வருகின்றனர். எனவே இவ் ஆய்வானது அங்காடி வியாபாரத்தில் ஈடுபடுகின்ற பெண்களின் பொருளாதார நிலை எவ்வாறு காணப்படுகின்றது என்பதனை ஆய்வு செய்வதாக அமையும்.

## II. ஆய்வுப்பிரச்சினை

திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட அங்காடி வியாபாரத்தில் ஈடுபடுகின்ற பெண்களின் குடும்பங்கள் பெரும்பாலும் வறுமைக்கோட்டிற்கு கீழே காணப்படுகின்றனர். அதாவது இக் குடும்பங்களில் 96 சதவீதமான குடும்பங்கள் சமூர்த்தி முத்திரை பெறுபவர்களாகவே காணப்படுகின்றனர் (குச்சவெளி பிரதேச செயலக சமூர்த்தி வங்கி அறிக்கைஇ 2016). பொதுவாக இலங்கையில் சமூர்த்தி முத்திரை பெறுபவர்கள் அனைவரும் வறுமைக்கோட்டிற்கு கீழ் காணப்படுபவர்களாகவே கணிக்கப்படுகின்றார்கள். அத்துடன் கடந்த சில வருடங்களாக அங்காடி வியாபாரத்தில் ஈடுபடுகின்ற பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து கொண்டு வருகின்றது (பிரதேச செயலக அறிக்கைஇ 2016). இவர்கள் தமது வருமானத்தை அதிகரிப்பதன் மூலம் பொருளாதார நிலையினை உயர்த்துவதனை அடிப்படையாக கொண்டே அங்காடி வியாபாரத்தில் ஈடுபடுகின்றனர். ஆனால் இவ் வியாபாரத்தின் மூலம் இவர்களின் பொருளாதாரநிலை எந்தளவிற்கு உயர்வடைந்துள்ளது? என்பது கேள்விக்குறியாகவே காணப்படுகின்றது.

## III. ஆய்வு நோக்கங்கள்

**பிரதான நோக்கம்**

அங்காடி வியாபாரத்தில் ஈடுபடுகின்ற பெண்களின் பொருளாதார நிலையினை அறிந்து கொள்ளுதல்.

**துணை நோக்கம்**

அங்காடி வியாபாரத்தில் ஈடுபடுகின்ற பெண்களின் பொருளாதாரக்காரணிகளின் நிலையினை அறிந்து கொள்ளுதல்.

பொருளாதாரக் காரணிகள் பெண்களின் பொருளாதாரநிலையில் எந்தளவிற்கு செல்வாக்கு செலுத்துகின்றது என்பதனை அறிதல்.

### IV. ஆய்வு வினா

அங்காடி வியாபாரத்தில் ஈடுபடுகின்ற பெண்களின் பொருளாதார நிலை எவ்வாறு காணப்படுகின்றது?
அங்காடி வியாபாரத்தில் ஈடுபடுகின்ற பெண்களின் பொருளாதாரக்காரணிகளின் நிலை எவ்வாறு காணப்படுகின்றது?
பொருளாதாரகாரணிகள் எந்தளவிற்கு பெண்களின் பொருளாதாரநிலையில் செல்வாக்கு செலுத்துகின்றது?

### V. நூலாய்வு


Wanninayake & Semasinghe (2017), இலங்கையில் ஊழியச்சந்தையில் பெண்களின் பங்களிப்பை பாதிக்கும் காரணிகள் பற்றி மேற்க்கொள்ளப்பட்ட இவ் ஆய்வில் பெண்கள் ஊழியச் சந்தையில் உள்நுழைவதை தடுக்கும் காரணிகள் பற்றி கண்டறிவதே பிரதான நோக்கமாக கொள்ளப்பட்டது. தரவுகள் மாதிரி கணக்கெடுப்பு முறை மூலம் சேகரிக்கப்பட்டு பல் மாறி பிற்செலவு மாதிரி மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டது. வருமானம், வேலைவாய்ப்பு, கல்விநிலை என்பன மாறிகளாக தெரிவு செய்யப்பட்டு இலங்கையின் ஊழியச் சந்தையில் பெண்களின் பங்களிப்பு வீதம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் போதியதாக காணப்படவில்லை என்ற முடிவும் பெறப்பட்டுள்ளது.
Pradeepkumar (2015), கேரளாவின் அங்காடி வியாபாரிகளின் சமூக பொருளாதாரநிலை பற்றிய ஆய்வானது கேரளாவில் உள்ள அங்காடி விற்பனையாளர்களின் இயல்பு, செயற்பாடுகள், மற்றும் சமுகப்பொருளாதார அம்சங்களை ஆராய்வதற்காக மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்விற்காக 300 அங்காடி விற்பனையாளர்கள் 3 பிரதேசங்களில் இருந்து தெரிவுசெய்யப்பட்டனர். பால், சமயம், சாதி. கல்விநிலை போன்ற மாறிகள் பயன்படுத்தப்பட்டன. வினாக்கொத்து மற்றும் நேர்காணல் மூலம் தரவு சேகரிக்கப்பட்டு Excel முறை மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டது. கேரளாவில் உள்ள தொழிலாளர்கள் நிதியியல் நிறுவனம் மற்றும் சமூக பாதுகாப்பின்மையால் நல்வாழ்வற்ற மற்றும் வேலைவாய்ப்பற்றவர்களாகக் காணப்படுகின்றனர் என்ற முடிவு பெறப்பட்டுள்ளது.

Pappeswari & Rajalakshmi (2014), திருச்செந்தூர் பிரதேசத்தில் அங்காடியில் உணவு விற்பனையாளர்களின் சமூக பொருளாதார நிலை பற்றிய இவ் ஆய்விற்காக முதன்நிலைத் தரவுகள் பதிலாளிகளிடமிருந்து நேர்காணல் மூலமும் இரண்டாம்நிலைத் தரவுகள் சஞ்சிகைகள் மற்றும் தரவுத் தளங்கள் என்பவற்றிலிருந்தும் பெறப்பட்டது. 125 அங்காடி விற்பனையாளர்கள் மாதிரியாக தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு பால், வயது, திருமணநிலை, குடும்பஅளவு, கல்விநிலை, வீட்டின் தன்மை போன்ற மாறிகள் பயன்படுத்தப்பட்டு பல் மாறி பிற்செலவு மாதிரி மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. ஆய்வின் முடிவாக கல்வி மற்றும் வணிக செயற்திறனுக்கிடையில் தாக்கம் எதுவும் ஏற்படுத்தப்படவில்லை என்பதுடன் அணைத்து வருமான வயதுப்பிரிவினரும் குறிப்பிடத்தக்க இடத்தை பெறுகின்றனர் எனவும் உறுதிசெய்யப்பட்டது.

Nnanna (2014), நைஜீரியா சந்தையில் உணவு விற்பனையில் பெண்களின் பங்களிப்பு பற்றிய இவ் ஆய்விற்காக உள்ளூர் அரச பகுதியிலிருந்து 120 பேர் மாதிரியாக தெரிவு செய்யப்பட்டனர். இங்கு வயது, கல்வி, வீட்டுத்துறையின் அளவு, வருமானம், வெளியீடு, மூலதனம், ஊழியம் என்பன மாறிகளாக பயன்படுத்தப்பட்டதோடு வினாக்கொத்து முறை மூலம் தரவு சேகரிக்கப்பட்டு பல்மாறி பிற்செலவு முறை மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டது. இவ் ஆய்வின் இறுதியில் நைஜீரியாவில் உணவு விற்பனை நடவடிக்கையில் பெண்களின் பங்களிப்பு வீதம் போதியதாக காணப்படவில்லை என்ற முடிவு பெறப்பட்டது.

Shymali (2004) , இவ் ஆய்வானது 2011-2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் Ranchi நகரில் காய்கறி அங்காடி விற்பனையாளர்களின் சமூக பொருளாதார நிலைமையினை அறிந்து கொள்வதனை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஆய்வுப்பிரதேசத்திலுள்ள 124 விற்பனையாளர்களைக் கொண்டு இவ்வாய்வு மேற்க்கொள்ளப்பட்டுள்ளது. வயது, திருமண எல்லை, சாதி, வருமானம் என்பன மாறிகளாக பயன்படுத்தப்பட்டதோடு நேர்காணல் மூலம் தரவு சேகரிக்கப்பட்டு Excel முறை மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டது. முடிவாக பெண்களின் குடும்ப சூழ்நிலை மற்றும் சுகாதாரநிலை மிகவும் மோசமான நிலையில் காணப்படுவதுடன்இ விற்பனை வருமானமானது ஆண் விற்பனையாளர்களிலும் பார்க்க மிகவும் குறைவாக இருப்பதாக இவ் ஆய்வு தெரிவிக்கின்றது.

## VI. எண்ணக்கருவாக்க சட்டகம்




ஆய்வுப்பிரதேசமான குச்சவெளி பிரதேச செயலகப்பிரிவிற்குட்பட்ட 100 பெண் அங்காடி வியாபாரிகள் எளிய எழுமாற்று மாதிரி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு அவர்களிடம் வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு தகவல்கள் பெறப்பட்டுள்ளது. இவ்வாய்வானது 2017 ஆம் ஆண்டினை ஆய்வுக் காலப் பகுதியாகவும் கொள்ளப்பட்டுள்ளது. ஆய்விற்காக சேகரிக்கப்பட்ட தரவுகள் Five Point Likert Scale Rating முறை மற்றும் தனிமாறிஇ இருமாறி பகுப்பாய்வு மூலமும் (Univariate and Bivariate Analysis Techniques) பகுப்பாய்வு செய்யப்பட்டு SPSS கணனி மென்பொருளைப் பயன்படுத்தி முடிவுகள் பெறப்பட்டுள்ளன.


## VIII.தரவு பகுப்பாய்வும் முடிவுகளும்

**தனிப்பட்ட தரவுகள்**

**அங்காடி வியாபாரத்தில் ஈடுபடும் பெண்களின் வயதுப்பரம்பல்**

ஆய்வுப் பிரதேசத்தில் சேகரிக்கப்பட்ட தரவுகளினூடாக அங்காடி வியாபாரத்தில் ஈடுபடும் பெண்களின் வயதுப்பரம்பலை பின்வரும் வரைபடம் காட்டுகின்றது.

வரைபடம் 1 :அங்காடி வியாபாரத்தில் ஈடுபடும் பெண்களின் வயதுப்பரம்பல்





ஆய்வு செய்யப்பட்ட பிரதேசத்தில் 41 இலிருந்து 50 வயதுடைய 44மூ ஆன பெண்கள் அதிகளவில் அங்காடி வியாபாரத்தில் ஈடுபடுபவர்களாக காணப்படுகின்றனர். இரண்டாவதாக 51 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் 27மூ பங்கினை வகிக்கின்றனர். மேலும் 31 இலிருந்து 40 வயதுக் கட்டமைப்பில் 22மூ பெண்கள் அங்காடி வியாபாரத்தில் ஈடுபடுவதோடுஇ 30 வயதிற்கு கீழ் உள்ள பெண்களில் 7மூ ஆன பெண்களே அங்காடி வியாபாரத்தில் ஈடுபடுபவர்களாக காணப்படுகின்றனர்.

**அங்காடி வியாபாரத்தில் ஈடுபடும் பெண்களின் கல்விநிலை**

ஆய்வுப் பிரதேசத்தில் சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் அங்காடி வியாபாரத்தில் ஈடுபடும் பெண்களின் கல்விநிலையானது பின்வரும் வரைபடம் எடுத்துக்காட்டுகின்றது.

வரைபடம் 2 கல்வி நிலை





மூலம் : கள ஆய்வுத்தரவு 2017.

ஆய்வுத்தரவுகளின் அடிப்படையில் நோக்கும் போது தரம் 1-3 வரை கல்வி கற்றவர்கள் 8 சதவீதமாகவும்இ தரம் 4-6 வரை கற்றவர்கள் 30 சதவீதமாகவும்இ தரம் 7-9 வரை கல்வி கற்றவர்கள் 58 சதவீதமாகவும்இ தரம் 10-12 வரை கற்றவர்கள் 4 சதவீதமாகவும் காணப்படுகின்றனர். எனவே அங்காடி வியாபாரத்தில் ஈடுபடுகின்ற பெண்களில் அதிகமானோர் தரம் 7-9 வரை கற்றவர்களே அதிகளவில் காணப்படுகின்றனர்.

**சந்தை அமைந்துள்ள இடம்**

ஆய்வு செய்யப்பட்ட ஆறு பிரதேசங்களிலும் அங்காடிகள் காணப்படுகின்றன. அவ் அங்காடிகளில் ஆய்விற்காக தெரிவு செய்யப்பட்ட 100 பெண்களும் வியாபாரத்தில் ஈடுபடும் அங்காடிகள் பற்றிய விபரம் பின்வரும் வரைபடம் காட்டப்படுகின்றது.

வரைபடம் 3 சந்தை அமைந்துள்ள இடம்




மூலம் : கள ஆய்வுத்தரவு, 2017

ஆய்வு செய்யப்பட்ட பிரதேசத்தில் ஆய்வின் அடிப்படையில் 29 சதவீதமான பெண்கள் புல்மோட்டை அங்காடியிலும், 9 சதவீதமான பெண்கள் வேலூர் அங்காடியிலும், 31 சதவீதமான பெண்கள் குச்சவெளி அங்காடியிலும்இ 16 சதவீதமான பெண்கள் நிலாவெளி அங்காடியிலும், 8 சதவீதமான பெண்கள் இறக்கக்கண்டி அங்காடியிலும் மற்றும் 7 சதவீதமான பெண்கள் கோபாலபுர அங்காடியிலும் வியாபார நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். குச்சவெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட அங்காடிகளில் அதிகளவிலான பெண் வியாபாரிகள் குச்சவெளி மற்றும் புல்மோட்டை அங்காடிகளில் வியாபாரத்தில் ஈடுபடுகின்றமையினை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

**குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை**

அங்காடி வியாபாரத்தில் ஈடுபடும் பெண்களில் மாதிரிகளாக தெரிவு செய்யப்பட்டவர்களின் குடும்பங்களில் அங்கத்தவர்கள் எண்ணிக்கை பற்றிய விபரத்தினை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

அட்டவணை 1 குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை

| குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| 1 இலிருந்து 2 வரை | 6 | 6% |
| 3 இலிருந்து 4 வரை | 27 | 27% |
| 5 இலிருந்து 6 வரை | 56 | 56% |
| 6 இற்கு மேல் | 11 | 11% |
| **மொத்தம்** | **100** | **100%** |

மூலம் : கள ஆய்வுத்தரவு, 2017

இங்கு 6 வீதமான குடும்பங்களில் அங்கத்தவர்களின் எண்ணிக்கை 1 தொடக்கம் 2 ஆகவும், 27 வீதமான குடும்பங்களில் அங்கத்தவர்களின் எண்ணிக்கை 3 தொடக்கம் 4 ஆகவும், 56 வீதமான குடும்பங்களில் அங்கத்தவர்களின் எண்ணிக்கை 5 தொடக்கம் 6 ஆகவும், 6 இனை விட அதிக அங்கத்தவர்களைக் கொண்டவர்கள் 11 வீதமாகவும் காணப்படுகின்றனர். இங்கு 5 தொடக்கம் 6 குடும்ப அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களின் பெண்களே அதிகளவில் அங்காடி வியாபாரத்தில் ஈடுபடுகின்றனர்.

**ஆய்வு தொடர்பான தரவுகள்**

**தரவு மதிப்பீட்டுமுறை**

100 மாதிரிகளிடம் சேகரிக்கப்பட்ட தரவுகள் SPSS கணனி மென்பொருளைப்பயன்படுத்தி பகுப்பாய்விற்குட்படுத்தப்படுகிறது. இதற்காக சாதாரண அளவீடான Likert Scale பயன்படுத்தப்பட்டுள்ளது.

i. பூரணமாக ஏற்றுக்கொள்ளவில்லை - 01
ii. ஏற்றுக்கொள்ளவில்லை - 02
iii. ஓரளவு ஏற்றுக்கொள்கிறேன் - 03
iv. ஏற்றுக்கொள்கிறேன் - 04
v. பூரணமாக ஏற்றுக்கொள்கிறேன் - 05

அட்டவணை 2 ஏற்றுக்கொள்ளல் மட்ட அளவுகள்

| Range | Decision Attributes |
|---|---|
| $1 \leq x_i \leq 2.5$ | குறைந்த மட்டம் |
| $2.5 < x_i \leq 3.5$ | நடுநிலை மட்டம் |
| $3.5 < x_i \leq 5.0$ | உயர்ந்த மட்டம் |

**அங்காடி வியாபாரத்தில் ஈடுபடுகின்ற பெண்களின் பொருளாதார காரணிகளின் நிலை**

அங்காடி வியாபாரத்தில் ஈடுபடும் பெண்களின் வாழ்வில் பொருளாதார காரணிகள் முக்கிய பங்கு வகிக்கின்றது. இப் பொருளாதார காரணிகள் ஒரு மாறியாக தெரிவு செய்யப்பட்டு வருமானம், சேமிப்பு, முதலீடு, சந்தைவாய்ப்பு, நிறுவன உதவிகள் போன்றன பரிமாணமாக (Dimension) பயன்படுத்தப்பட்டுள்ளன.

அட்டவணை 3 பொருளாதார காரணிகளின் நிலை

| பரிமாணம் | இடை | நியம விலகல் |
|---|---|---|
| வருமான மட்டம் | 3.78 | .57 |
| சேமிப்பு நிலை | 3.32 | 1.09 |
| முதலீட்டு மட்டம் | 3.49 | .77 |
| சந்தை வாய்ப்பு | 3.56 | .70 |
| நிறுவன ரீதியான உதவிகள் | 3.75 | .66 |
| பொருளாதார காரணிகள் | 3.60 | .57 |

பொருளாதார காரணிகள் 5 பரிமாணங்களைக் (Dimensions) கொண்டு காணப்படுகின்றது. அவையாவன வருமானம், சேமிப்பு, முதலீட்டு, சந்தை வாய்ப்பு, நிறுவன ரீதியான உதவிகள் என்பனவாகும். இவற்றின் இடைப்பெறுமதிகள் முறையே 3.78, 3.32, 3.49, 3.56 மற்றும் 3.75 ஆக காணப்படுகின்றன. ஒட்டுமொத்தமான பொருளாதார காரணிகளின் இடைப்பெறுமதியானது 3.60 ஆக உயர்ந்த மட்டத்திலும் நியமவிலகலானது 0.57 ஆகவும் காணப்படுகின்றது. இதன்படி நோக்கும்போது பொருளாதார காரணிகளின் சராசரி இடைப்பெறுமானம் $3.5 < x_i \leq 5.0$ என்ற வீச்சினுள் காணப்படுவதால் பொருளாதார காரணிகளின்நிலை உயர்ந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது.

அட்டவணை 4 பொருளாதார காரணிகளின் பங்களிப்பு மட்டம்

| Level | Frequency | Percentage (%) |
|---|---|---|
| குறைந்த மட்டம் | 03 | 3% |
| நடுநிலை மட்டம் | 37 | 37% |
| உயர்ந்த மட்டம் | 60 | 60% |
| மொத்தம் | **100** | **100%** |

அட்டவனை 4.19 இன்படி, மாதிரியாக தெரிவு செய்யப்பட்ட 100 அங்காடி வியாபாரிகளில் 46 சதவீதமானோர் கல்வியில் உயர்மட்டத்தினையும், 40 சதவீதமானோர் நடுநிலை மட்டத்தினையும் 05 சதவீதமானோர் குறைந்த மட்டத்தினையும் கொண்டுள்ளனர்.

**அங்காடி வியாபாரத்தில் ஈடுபடுகின்ற பெண்களின் பொருளாதார நிலை**

**அட்டவணை 5 அங்காடி வியாபாரத்தில் ஈடுபடும் பெண்களின் பொருளாதார நிலை**

| கூற்றுக்கள் | இடை | நியமவிலகல் |
|---|---|---|
| அங்காடிவியாபாரத்தில் ஈடுபடுவதற்கு முதலீடானது போதுமானதாக அமையப்பெற்றுள்ளது. | 3.43 | .924 |
| இவ் அங்காடி வியாபாரத்தில் இவ்வளவு காலம் ஈடுபடுவதற்கு பொருளாதார சூழல் சாதகமாக அமைந்தது. | 3.62 | .896 |
| குடும்ப வருமானமானது தொடர்ச்சியாக சீரானதாக கிடைக்கப்பெறுகின்றது. | 3.03 | 1.193 |
| குடும்ப சேமிப்புக்களில் முன்னேற்ற நிலையினை அவதானிக்ககூடியதாக உள்ளது. | 3.21 | 1.03 |
| குடும்பங்களுக்கான நிறுவன உதவிகள் தொடர்ந்தும் கிடைக்கப்பெறுகின்றன. | 3.21 | 1.05 |
| சமூகபொருளாதார நிலை | 3.30 | .75 |

பொருளாதார நிலைக்கான இடைப்பெறுமதிகள் முறையே 3.43, 3.62, 3.03, 3.21, 3.21 ஆக காணப்படுகின்றன. ஒட்டுமொத்தமான பொருளாதார நிலையின் இடைப்பெறுமதியானது 3.30 ஆக நடுத்தர மட்டத்திலும் நியமவிலகலானது 0.46 ஆகவும் காணப்படுகின்றது. இதன்படி நோக்கும்போது அங்காடி வியாபாரத்தில் ஈடுபடும் பெண்களின் சமூக பொருளாதார நிலையானது $2.5 < x_i \leq 3.5$ என்ற வீச்சினுள் நடுத்தர மட்டத்திலேயே காணப்படுகின்றது.

மாதிரியாக தெரிவு செய்யப்பட்ட 100 அங்காடி வியாபாரிகளில்46சதவீதமானோரின்பொருளாதாரநிலையில் உயர்மட்டத்தினையும், 37 சதவீதமானோர் நடுநிலை மட்டத்தினையும், 17 சதவீதமானோர் குறைந்த மட்டத்தினையும் கொண்டுள்ளனர்.

**பொருளாதார காரணிகள் எந்தளவிற்கு பெண்களின் சமூக பொருளாதாரநிலையில் செல்வாக்கு செலுத்துகின்றது என்பதனை அறிந்து கொள்ளுதல்.**

பொருளாதார காரணிகள் எந்தளவிற்கு பெண்களின் சமூக பொருளாதார நிலையில் செல்வாக்கு செலுத்துகின்றது என்பதனை அறிந்து கொள்வதற்கு சாராமாறியான பொருளாதார காரணிகளும் சார்ந்த மாறியான சமூக பொருளாதார நிலையும் பயன்படுத்தப்படுகின்றன. பொருளாதார காரணிகள் பெண்களின் சமூக பொருளாதார நிலையில் எந்தளவிற்கு தாக்கம் செலுத்துகின்றது என்பதனை அறிந்து கொள்வதற்கு எளிய பிற்செலவு மாறி முறை (Simple Linear Regression model) பயன்படுத்தப்பட்டுள்ளது

அட்டவணை 7 : பொருளாதாரகாரணி மற்றும் பொருளாதார நிலை என்பவற்றிக்கான எளிய பிற்செலவுமாறி

| R | $R^2$ | Adjusted R Square | Std. Error of the Estimate | Change Statistics | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | R Square Change | F Change | Sig. F Change |
| .797 | .635 | .631 | .45875 | .635 | 170.56 | .000 |
| Predictors: (Constant), Economic Factors<br>*(Source: Survey Data)* | | | | | | |

அட்டவணையின்படி கு இன் பெறுமதி (F =170.56, df = (1,98)) என எண்கணித ரீதியாக சிறப்பானதாக உள்ளது. அதனால் சாராமாறியான பொருளாதாரகாரணிகளுக்கும், சார்மாறியான பொருளாதார நிலைக்கும் இடையில் சிறப்பாகவும் உறுதியானதாகவும் நேரான தொடர்பு காணப்படுவதாகவும் காணப்படுகின்றது என்பதனை ($r = 0.797$, $p< 0.000$) மற்றும் “R Square” ($R^2$ =0.635) ஆக காணப்படுவது சமூகக் காரணிகள் 63.5 சதவீதம் சமூக பொருளாதாரநிலையில் தாக்கம் செலுத்துகின்றது என்பதனை காட்டுகின்றது. ஆகவே இங்கு ஒழுங்கமைக்கப்பட்ட துணிவுக் குணகம் (Adjusted R2) சமூக காரணிகள் சமூக பொருளாதார நிலையில் 63.1 சதவீதம் தாக்கம் செலுத்துகின்றது என்பதனை விளக்குகின்றது. எனவே இவ் நேர்கோட்டு (Linear) பகுப்பாய்வில் சாரா மாறியான பொருளாதார காரணிகள் சிறப்பாகவும் நேராகவும் செல்வாக்கு செலுத்துகின்றது.

அட்டவணை 8 பொருளாதார காரணி மற்றும் பொருளாதாரநிலை என்பவற்றிற்கான குணகம் (எளிய பிற்செலவு மாறி)

| Model | Unstandardized Coefficients | | Standardized Coefficients | t | Sig | 95% confidence interval for B | |
|---|---|---|---|---|---|---|---|
| | B | Std. Error | Beta | | | Lower Bound | Upper Bound |
| Constant | -.504 | .295 | | -1.708 | .091 | -1.089 | .081 |
| Economic Factors | 1.056 | .081 | .797 | 13.060 | .000 | .895 | 1.216 |

*(Source: Survey Data)*

மேலே காட்டப்பட்டுள்ள அட்டவனையின்படி சமூகக்காரணிகளின் Sig.t இன் பெறுமதி 0.000 (t = 13.06, $p<0.05$) இவை குறிப்பிடுவது யாதெனில் பொருளாதாரக் காரணிகள் கணித ரீதியாக சிறப்பானதாகவும் நேராகவும் (b = 1.056) சமூக பொருளாதாரநிலையின் மேல் தாக்கம் செலுத்துகின்றது. பொருளாதார காரணிகள் ஒரு அலகால் அதிகரிக்கும் போது பெண்களின் சமூக பொருளாதார நிலைமை 1.056 அலகுகலால் அதிகரிக்கும்.

### IX. ஆய்வின் முடிவு

ஆய்வின் முடிவின்படி அவதானிக்கும் போது மாதிரியாக தெரிவு செய்யப்பட்ட 100 அங்காடி வியாபாரிகளில் 60 சதவீதமானோர் பொருளாதார காரணியில் உயர்மட்டத்தினையும், 37 சதவீதமானோர் நடுநிலை மட்டத்தினையும் 03 சதவீதமானோர் குறைந்த மட்டத்தினையும் கொண்டுள்ளனர். அத்துடன் பொருளாதார காரணிகளின் இடைப் பெறுமதியானது 3.60 ஆக உயர்ந்த மட்டத்தில் காணப்படுகின்றது. இதற்கான காரணம் பொருளாதாரகாரணிகளான வருமானம், சந்தை வாய்ப்பு, நிறுவன ரீதியான உதவிகள் ஆகிய உயர்ந்த மட்டத்திலும் சேமிப்பு, முதலீட்டு என்பன நடுத்தர மட்டத்திலும் காணப்படுவதேயாகும். ஆய்வின் முடிவின்படி நோக்கும் போது பொருளாதாரகாரணிகள் பெண்களின் பொருளாதார நிலையில் 63.5 சதவீதம் செல்வாக்கு செலுத்துகின்றது. இருமாறி பகுப்பாய்வின்படி எளிய பிற்செலவுமாறி குறிப்பிடுவது யாதெனில் குச்சவெளி பிரதேசத்தில் அங்காடி வியாபாரத்தில் ஈடுபடும் பெண்களின் பொருளாதாரநிலை மீது பொருளாதார காரணிகள் சிறப்பாகவும், நேராகவும் செல்வாக்கு செலுத்துகின்றது என்ற முடிவு பெறப்பட்டுள்ளது.

### உசாத்துணை

1. Nnanna Mba, A.G.W.U., Anyanwu, C.I. and Oriuwa, O., 2014. Determinants of Women Participation in Food Crop Marketing in Abia State, Nigeria, p.7-11
2. Pappeswari, C. and Rajalakshmi, S., 2014. Socio-Economic Conditions of Street Food Vendors-With Special Reference to Tiruchendur Area. Indian Journal of Commerce and Management Studies, 5(1), p.70.
3. Pradeep kumar, K., 2015. Socio - Economic Features of Street Vending Enterprises in Kerala, International Journal of Management And Commerce Innovations, p.750-755
4. Shymali, B., 2004 "A Study of Socio Economic Condition of Vegetable Street Vendors in Ranchi, Jharkhand Journal of Social Development", p.1-9,
5. Semasinghe, W.M., 2017. Women's Labor force Participation in Sri Lanka: An Inquiry into the Factors Influencing Women's Participation in the Labor Market. International Journal of Social Science and Humanity, 7(3), p.184.
6. பிரதேசசெயலகஅறிக்கை, (2016-2017), பிரதேசசெயலகம், குச்சவெளி.
7. சமுர்த்தி வங்கி அறிக்கைஇ (2016-2017), பிரதேச செயலகம், குச்சவெளி.